**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்– சட்டமன்றப் பேரவை விதி எண்.110–இன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு – 9 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளை நிலை உயர்த்துதல் – நிருவாக ஒப்பளிப்பு – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந–7)துறை**

அரசாணை (நிலை) எண்.23

நாள்: 08.02.2021
திருவள்ளுவர் ஆண்டு 2052,
சார்வரி, தை மாதம் 26 –ஆம் நாள்,
படிக்கப்பட்டது.

பழங்குடியினர் நல இயக்குநரின் கடித ந.க.எண்.பமே1/ஈ1/
2713/2020, நாள் 13.04.2020.

******

**ஆணை :–**

2020–2021–ஆம் ஆண்டிற்கான, வரவு செலவு கூட்டத் தொடரில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சட்டப் பேரவை விதி எண்.110–இன் கீழ், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பாக வெளியிட்ட அறிவிப்புகளுள் கீழ்க்கண்ட அறிவிப்பும் ஒன்றாகும்:–

> **"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கர்கள் நலனை கருத்தில் கொண்டு, 6 தொடக்கப்பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 5 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 17 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் ரூ.48.74 கோடி மதிப்பீட்டில் நிலை உயர்த்தப்படும்".**

2. மேலே படிக்கப்பட்ட பழங்குடியினர் நல இயக்குநரின் கடிதத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேற்காணும் அறிவிப்பினை செயல்படுத்திடும் பொருட்டு, ஆதிதிராவிடர் நலப் பள்ளிகள் நீங்கலாக, பழங்குடியினர் நலத் துறையின் கீழ் இயங்கும் 2 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும் மற்றும் 7 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்திடலாம் எனவும், நிலை உயர்த்தப்படும் பள்ளிகளுக்கு ஆசிரியர் / ஆசிரியரல்லாத பணியிடங்களுக்கு சம்பளம் உள்ளிட்ட தொடரும் செலவினமாக ரூ.12,39,48,468/– மற்றும் வகுப்பறை / ஆய்வுக்கூட கட்டிடங்கள், அறைகலன் உள்ளிட்டவற்றிற்கான தொடராச் செலவினமாக ரூ.7,24,93,350/– நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வழங்குமாறு கோரி நிலை உயர்த்தக் கருதும் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளின் பட்டியலை அரசுக்கு அனுப்பியுள்ளார்.

3. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்துவது தொடர்பான பழங்குடியினர் நல இயக்குநரின் கருத்துரு அரசால் கவனமுடன் ஆய்வு செய்யப்பட்டது. அதனடிப்படையில், இவ்வரசாணையின் இணைப்பு I-இல் குறிப்பிடப்பட்டுள்ள 9 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளை, உத்தேச செலவினமான ரூ.19,64,41,818/– (ரூபாய் பத்தொன்பது கோடியே அறுபத்து நான்கு இலட்சத்து நாற்பத்தோராயிரத்து எண்ணூற்று பதினெட்டு மட்டும்) மதிப்பீட்டில் நிலை உயர்த்த நிருவாக ஒப்பளிப்பு வழங்கிடவும், 2020–2021–ஆம் கல்வியாண்டு முடிவடைய உள்ள நிலையில் எதிர்வரும் நிதியாண்டில் (2021–2022) நிதி ஒப்பளிப்பு வழங்கிடவும் முடிவு செய்து அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

4. நிலை உயர்த்தப்பட்ட 9 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கு இவ்வரசாணையின் இணைப்பு II–இல் கண்டவாறு ஊதிய ஏற்ற முறையில் 121 ஆசிரியர் / ஆசிரியரல்லாத பணியிடங்களும், வெளிமுகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் நிரப்பிட ஏதுவாக 9 காவலர் மற்றும் 9 துப்புரவாளர் பணியிடங்களும் தோற்றுவிக்க நிருவாக ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

5. நிலை உயர்த்தப்பட்ட அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கு தேவையான தொடரும் மற்றும் தொடராச் செலவினம் ஒப்பளிப்பு செய்வதற்கு ஏதுவாக, உரிய கருத்துருவினை எதிர்வரும் நிதியாண்டில் அதற்கான உட்கூறு விவரங்களுடனும் (Break up details), வகுப்பறை கட்டடங்கள், ஆய்வு கூட கட்டடங்கள், சுற்றுச் சுவர் கட்டுதல் தொடர்பாக தாட்கோவிடமிருந்து விரிவான மதிப்பீட்டு அறிக்கையினையும் பெற்று அரசுக்கு அனுப்பி வைக்குமாறு பழங்குடியினர் நல இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித் துறையின் இசைவினை அதன் அ.சா.கு.எண்.5162/ நிதி (ஆதி(ம)பந) / (மை.ம.ஆ.பி)/2021 நாள் 03.02.2021–இல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஒட்டெம் டாய்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை– 600 005.
ஆணையர், ஆதி திராவிடர் நலம், சென்னை – 600 005.
மாவட்ட ஆட்சித் தலைவர், கன்னியாகுமரி / விழுப்புரம் / ராணிப்பேட்டை/ தருமபுரி திருவண்ணாமலை / நீலகிரி / திருச்சி / திருப்பத்தூர்.
மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், கன்னியாகுமரி / விழுப்புரம் / ராணிப்பேட்டை/ தருமபுரி / திருவண்ணாமலை / நீலகிரி / திருச்சி / திருப்பத்தூர்.
சம்பந்தப்பட்ட பள்ளி தலைமை ஆசிரியர்கள். (பழங்குடியினர் நல இயக்குநர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை – 600 008.
மாவட்டக் கருவூல அலுவலர், கன்னியாகுமரி / விழுப்புரம் / ராணிப்பேட்டை/ தருமபுரி / திருவண்ணாமலை / நீலகிரி / திருச்சி / திருப்பத்தூர்.
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை – 18 / 35. (பெயரில்)
முதன்மை மாநிலக் கணக்காயர் (கணக்குகள் மற்றும் பண வரவுகள்) சென்னை – 600 018.

**நகல்**
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 600 009.
துணை முதலமைச்சர் அலுவலகம், சென்னை– 600 009.
அமைச்சர் (ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலாளர், சென்னை – 600 009.
நிதித் (ஆதி (ம) பந) / (மை.ம.ஆ.பி) துறை, தலைமைச் செயலகம், சென்னை – 600 009.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்கள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

/ பிரிவு அலுவலர் 8/2/2024
08/02/2024

**இணைப்பு–I**

**அரசாணை (நிலை) எண். 23 ஆதி(ம)பந(ஆதிந7)துறை, நாள் 08.02.2021**

**உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும் 2 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட நடுநிலைப் பள்ளிகள்**

| | |
|---|---|
| கன்னியாகுமரி மாவட்டம் | மணலோடை, அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட நடுநிலைப் பள்ளி |
| விழுப்புரம் மாவட்டம் | பரங்கிநத்தம், அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட நடுநிலைப் பள்ளி |

**மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும் 7 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலைப் பள்ளிகள்**

| | |
|---|---|
| திருவண்ணாமலை மாவட்டம் | 1. ஆட்டியனூர், அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலைப் பள்ளி |
| | 2. பட்டரைக்காடு, அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலைப் பள்ளி |
| தருமபுரி மாவட்டம் | நரிப்பள்ளி, அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலைப் பள்ளி |
| விழுப்புரம் மாவட்டம் | கொட்டப்புத்தூர், அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலைப் பள்ளி |
| நீலகிரி மாவட்டம் | கார்குடி, அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலைப் பள்ளி |
| திருச்சி மாவட்டம் | சின்ன இலுப்பூர், அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலை பள்ளி |
| திருப்பத்தூர் மாவட்டம் | நெல்லிவாசல், அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலைப் பள்ளி |

**ஒட்டெம் டாய்**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்
08/02/2021

## இணைப்பு–II

**அரசாணை (நிலை) எண். 23 ஆதி(ம)பந(ஆதிந7)துறை, நாள் 08.02.2021**

| உயர்நிலைப் பள்ளிகளாக நிலையுயர்த்தப்படும் 2 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் தோற்றுவிக்கப்பட வேண்டிய ஆசிரியர் / ஆசிரியரல்லாத பணியிடங்கள் | | | |
|---|---|---|---|
| பணியிடம் | ஊதிய நிலை | ஊதிய விகிதம் | எண்ணிக்கை |
| உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் | Level - 23 | ரூ.36,900–1,16,600 | 2 |
| பட்டதாரி ஆசிரியர் | Level - 16 | ரூ.36,400–1,15,700 | 6 (ஒரு பள்ளிக்கு 3 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் வீதம் 2 பள்ளிக்கு) |
| தொடக்கப் பள்ளி தலைமையாசிரியர் | Level - 15 | ரூ.36,200–1,14,800 | 2 |
| இளநிலை உதவியாளர் | Level- 8 | ரூ.19500–62000/– | 2 |
| தட்டச்சர் | Level- 8 | ரூ.19500–62000/– | 2 |
| அலுவலக உதவியாளர் | Level- 1 | ரூ.15,700–50,000/– | 2 |
| **மொத்தம்** | | | **16** |
| காவலர் (வெளிமுகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்படவேண்டும்) | | | 2 |
| துப்புரவாளர் (வெளிமுகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்படவேண்டும்) | | | 2 |
| **மொத்த பணியிடங்கள்** | | | **20** |

| மேல்நிலைப் பள்ளிகளாக நிலையுயர்த்தப்படும் 7 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் தோற்றுவிக்கப்பட வேண்டிய ஆசிரியர் / ஆசிரியரல்லாத பணியிடங்கள் | | | |
|---|---|---|---|
| பணியிடம் | ஊதிய நிலை | ஊதிய விகிதம் | எண்ணிக்கை |
| மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் | Level - 23 | ரூ.56,900–1,80,500 | 7 |
| முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் | Level - 18 | ரூ.36,900–1,16,600 | 63 (ஒரு பள்ளிக்கு 9 முதுகலை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் வீதம் 7 பள்ளிகளுக்கு) |
| உடற்கல்வி இயக்குநர் | Level - 11 | ரூ.35,400–1,12,400 | 7 |
| உதவியாளர் | Level- 10 | ரூ.20600–65.500/– | 7 |
| தட்டச்சர் | Level- 8 | ரூ.19500–62000/– | 7 |
| ஆய்வக உதவியாளர் | Level- 8 | ரூ.19500–62000/– | 7 |
| அலுவலக உதவியாளர் | Level - 1 | ரூ.15,700–50,000/– | 7 |
| **மொத்தம்** | | | **105** |
| காவலர் (வெளிமுகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்படவேண்டும்) | | | 7 |
| துப்புரவாளர்(வெளிமுகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்படவேண்டும்) | | | 7 |
| **மொத்த பணியிடங்கள்** | | | **119** |

**ஒட்டெம் டாய்**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர் 8/2/2024